**அம்புலுவாவ திசாநாயக்க முதியன்சேலாகே ஜயரத்ன சமய நிலையம் மற்றும் உயிரின பல்வகை தொகுதி பொறுப்பு நிதியம் - 2022**

---

அம்புலுவாவ திசாநாயக்க முதியன்சேலாகே ஜயரத்ன சமய நிலையம் மற்றும் உயிரின பல்வகை தொகுதி பொறுப்பு நிதியத்தின் 2022 திசெம்பர் 31 முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக 2009 இன் 44 ஆம் இலக்க அம்புலுவாவ திசாநாயக்க முதியன்சேலாகே ஜயரத்ன சமய நிலையம் மற்றும் உயிரின பல்வகை தொகுதி பொறுப்பு நிதியச் சட்டத்தின் 10(4) பிரிவு மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

### 1.2 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல் தொடர்பான முகாமைத்துவத்தினதும் அவ்ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்படும் ஒவ்வொரு நிறுவனத்தினாலும் அந்த நிறுவனம் தொடர்பாக வருடாந்தம் மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக முறையான புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும். அச் சட்டத்தின் 16(2) பிரிவின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்படும் ஒவ்வொரு நிறுவனம் தொடர்பான வருடாந்த நிதிக் கூற்றுக்கள், விதிகள் மூலம் குறிப்பிடக்கூடிய வகையில் காலப்பகுதியில் அந் நிறுவனங்களின் வருடாந்த செயலாற்றல் அறிக்கையும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். அச் சட்டத்தின் 38(1)(ஈ) பிரிவின் பிரகாரம் ஆண்டறிக்கை மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்கள் உரிய நேரத்திற்கு தயாரித்தல் இடம்பெறுவதாக உறுதிப்படுத்தப்பட வேண்டியதுடன் அதற்கு மேலதிகமாக கணக்காய்வு செய்யப்படும் நிறுவனத்திற்குரிய ஆண்டறிக்கையை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் பொறுப்பாக இருக்க வேண்டும்.

## 2. கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 கணக்காய்வு விடயப் பரப்பு மட்டுப்படுத்தப்படல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரிய மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக சரியான, தெளிவான முழுமையான தகவல்கள் கணக்காய்விற்கு தேவைப்பாட்டின் பிரகாரம் வழங்குவதற்கு பொறுப்பு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அம்புலுவாவ வளாகத்தினுள் அலுவலகமொன்று நடத்திச் செல்லப்பட்டிருந்த போதிலும் பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் முறையாக பேணிச் செல்லப்பட்டிராததுடன் அதற்காக அதிகாரமளிக்கப்பட்ட பொறுப்புக் கூறப்பட வேண்டிய உத்தியோகத்தரொருவர் அலுவலக கடமையில் ஈடுப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | அதற்காக எதிர்காலத்தில் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் ஒருவரின் சேவையை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | அதிகாரமளிக்கப்பட்ட பொறுப்பு கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் அலுவலக கடமையில் ஈடுப்படுத்தப்படல் வேண்டியதுடன் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணிச் செல்லப்படல் வேண்டும். |

**2.2 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 1/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 1 ஆம் பகுதியின் 15.1 ஆம் பந்தியில் உள்ளடக்கப்பட்ட நிதிப் பிரமாணம் 877(2)(ஈ) பந்தியின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 2 மாதங்களுக்குள் உறுதிப்படுத்தப்பட்ட நிதிக் கூற்றுக்களுடன் செயலாற்றல் அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து இவ்வறிக்கை திகதி வரையிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நிதிக் கூற்றுக்களை சமர்ப்பிப்பதாக | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங் களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல் வேண்டும். |

**2.3 கணக்கேடுகள் ஆவணங்கள் மற்றும் அறிக்கைகள் பராமரித்தல்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நம்பிக்கை பொறுப்பு சபையின் உறுப்பினர்கள் மற்றும் அதன் மாற்றங்களுக்குரிய விபரங்கள் உள்ளடக்கப்பட்ட பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை | எதிர்காலத்தில் அவ்வாறான பதிவேடொன்றை பேணுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நம்பிக்கை பொறுப்பு சபையின் மாற்றங்கள் தொடர்பாக விபரங்கள் உள்ளடக்கப்பட்ட பதிவேடு ஒன்று பேணி செல்லப்பட வேண்டும் |
| (ஆ) | மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்காக நிதியத்தினால் பொதுப் பேரேடொன்று செல்லப்பட்டு இருக்கவில்லை | சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை சீராக்கி நாளது வரையான பேரேடொன்றை பராமரித்து செல்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | பொது பேரேடொன்றை என்று பேணி செல்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும |
| (இ) | கொடுப்பனவு செய்யும்போது உரிய உறுதிச் சீட்டுக்கள் தயாரிக்கப்பட்டு அவை இலக்கமிடப்பட்டு காசேட்டிலும் செலவின பேரேட்டிலும் பதிவு செய்யப்பட்டு கொடுப்பனவு் செய்யப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு உறுதிச்சீட்டுகள் | சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை எதிர்காலத்தில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | கொடுப்பனவ் செய்யும்போது உறுதி சீட்டுகளை தயாரித்து காசேட்டிலும் செலவின பேரேட்டிலும் பதிவு செய்த பின்னர் கொடுப்பனவு செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தயாரிக்கப்படாமல் நேரடியாக காசோலை எழுதி கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. காசோலையில் அடிக்குறிப்பில் உள்ள விபரங்களை அடிப்படையாகக் கொண்டு பின்னர் காசேட்டில் கொடுக்கல் வாங்கல் பதிவு செய்யப்பட்டு உறுதிச் சீட்டு தயாரிக்கும் நடைமுறை ஒன்று பின்பற்றப்பட்டு இருந்தது. | | |
| (ஈ) | முற்பண பதிவேடொன்று பேணி செல்லப்பட்டு இருக்கவில்லை | எதிர்காலத்தில் சீராக்குகிறேன் சில்லறை காசு முற்பண பதிவேடு ஒன்று பேணிச் செல்லப்படுவதாக | முற்பண பதிவேடொன்று பேணிச் செல்லப்பட வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டுக்குரிய நம்பிக்கை பொறுப்பின் கூட்ட அறிக்கை உள்ளடக்கப்பட்ட பதிவேடு ஒன்று கணக்காவிற்கு சமர்ப்பிக்கப்படவில்லை | எதிர்காலத்தில் ஒவ்வொரு பொறுப்புச் சபை கூட்டத்தின் அறிக்கையை கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்படும் | நம்பிக்கை பொறுப்பின் கூட்ட அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஊ) | நிலையான சொத்துக்கள் பதிவேடு என்று பேணப்பட்டு இருக்கவில்லை | எதிர்காலத்தில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | அனைத்து நிலையான சொத்துக்களும் உள்ளடக்கப்பட்ட நிலையான சொத்து பதிவேடு ஒன்று தயாரிக்கப்பட வேண்டும் |

## 2.4 கணக்கீட்டு குறைபாடுகள்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| மீளாய்வாண்டின் வீதி நிர்மாணங்களுக்காக செலவிடப்பட்ட ரூபா 826,560 தொகை மூலதனமாக்கப்பட்டு இருக்கவில்லை | வீதி அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்தும் ஏனைய நிறுவனங்களிடம் இருந்தும் தகவல்கள் பெற்றுக் கொள்ளப்பட்டு சொத்துக்களின் கீழ் எடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | அபிவிருத்தி செயற்திட்டங்களின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

**2.5 கணக்காய்விற்காக எழுத்துமூல சான்றுகளின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சில்லறை காசு செலவினம், வாடகை, எரிபொருள், மின்சாரக் கட்டணங்கள், சம்பளம், திருத்த வேலைகள், கொள்வனவு போன்ற செயற்பாடுகளுக்குரிய 50 சந்தர்ப்பங்களுக்குரிய ரூபா 6,621,322 ஆன பட்டியல்கள், அளவீட்டுப் பத்திரங்கள், செலவீனத்தை மேற்கொள்ளும் தேவைப்பாடு, இருப்பு சான்றிதழ்கள், பரிசோதனை அறிக்கைகள் மற்றும் பொலிஸ் முறைப்பாடுகள், சம்பள பதிவேடு, உடன்படிக்கை மற்றும் மதிப்பீடுகள், நியமனக் கடிதங்கள் போன்ற தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் அவற்றை கணக்காய்வின் போது திருப்திகரமாக உறுதிப்படுத்த முடியாதிருந்தது. | எதிர்காலத்தில் சீராக்குவதாக | கொடுப்பனவுகளுக்குரிய பட்டியல்கள் சான்றிதழ்கள் பயன்பாட்டு பதிவேடுகள் மற்றும் கோவைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | உருவாக்குனரின் சிலை அண்மித்த பூமியை அபிரவிருத்தி செய்வதற்காக குறித்த காணிப்பகுதி கொங்கிரீட் இடப்பட்டதாக குறிப்பிடப்பட்ட போதும் அதற்குரிய பெறுகை நடவடிக்கைகள் கிரய மதிப்பீடு அளவீட்டு பத்திரம் என்பன கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்படவில்லை. அதன் காரணமாக செயற்பாட்டுக்குரிய செலவினம் இனங் காணப்படமுடியாமல் இருந்ததுடன் அச்செலவினத்தை உறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது | வீதி அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்தும் ஏனைய நிறுவனங்களிடம் இருந்தும் தகவல்கள் பெற்றுக் கொள்ளப்பட்டு சொத்துக்களின் கீழ் எடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | அபிவிருத்தி செயற்திட்டங்களின் பெறுமதி சொத்துக்களாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

**2.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடனான தொடர்பு**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | | | |
| (i) நிதிப் பிரமாணம் 103(1) மற்றும் 104 | நிதியத்துக்கு சொந்தமான வாகனம் ஒன்று முன்னைய ஆண்டின் போது விபத்துக்கு உட்பட்டிருந்த போதும் அது தொடர்பாக ஆரம்ப மற்றும் இறுதி பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில் லை. அவ்வாறே விபத்து தொடர்பாக பொலீஸ் அறிக்கையும் பெற்றுக் கொள்ளப் பட்டிருக்க வில்லை | எதிர்காலத்தில் விபத்து தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ii) நிதிப் பிரமாணம் 115 | வீதி நிர்மாண நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த ஊழியர்களுக்கு உணவு பானங்களை வழங்குவதற்காக 2021 திசெம்பர் மாதம் ரூபா 441,100 செலவிடப்பட்டு அதில் ரூபா 220,550 மீளாய்வாண்டின் செப்தம்பர் 10 ஆம் திகதி கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும் அதற்காக அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (iii) நிதிப் பிரமாணம் 135 | செலவினம் தொடர்பாக அதிகாரம் அளித்தல், அங்கீகாரம் அளித்தல் உறுதிப்படுத்துதல் மற்றும் கொடுப்பனவுக்காக அதிகாரங்கள் கையளிப்பு இடம் பெறாதிருந்ததுடன் அதிகாரங்களை கையளிக்காத இரண்டு ஊழியர்களால் மீனாய்வாண்டில் | அதிகாரம் வழங்குதல் சான்றுறுதிப்படுத்துதல், கொடுப்பனவு தொடர்பான அதிகாரங்களை எதிர்காலத்தில் முறையாக கையளிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்களில் அங்கீகரித்தல் மற்றும் சான்றுதிப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | | |
| (iv) | நிதிப் பிரமாணம் 138 | மீளாய்வாண்டின் திசெம்பர் மாதம் ரூபா 5,390,189 ஆன கொடுப்பனவுகளுக்குரிய உறுதிச்சீட்டுகள் சான்றுறுதிப் படுத்தப்பட்டிருக்கவில்லை | எதிர்காலத்தில் அவ்வாறான குறைபாடுகள் இடம் பெறாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | கொடுப்பனவு உறுதி சீட்டுக்களை சான்றுறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (v) | நிதிப் பிரமாணம் 168 | தொடர்பாடல் கோபுரங்களுக்காக மீளாய்வாண்டில் கிடைத்திருந்த ரூபா 242,400 ஆன வருமானத்திற்காக பெறுவனவு பற்றுச்சீட்டுகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதுடன் இது நேரடியாக வங்கியில் செலவு வைக்கப்பட்டமையால் அது தொடர்பாக பற்றுச்சீட்டு வழங்கப்படவில்லை. | பெறுவனவிற்காக பற்றுச்சீட்டுகள் வழங்கப்பட வேண்டும். |
| (vi) | நிதிப் பிரமாணம் 262 (2) | கொடுப்பனவு செய்யப்பட்ட அனைத்து உறுதிச்சீட்டுக்களிலும் அவற்றை உறுதிப்படுத்தப்படுகின்ற ஆவணங்களில் ‘‘கொடுப்பனவு செய்யப்பட்டது’’ முத்திரை இடப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | எதிர்காலத்தில் சீராக்கம் செய்வதாக | கொடுப்பனவு களுக்குரிய அனைத்து ஆவணங்களிலும் குறித்த முத்திரை இடப்பட வேண்டும். |
| (vii) | நிதிப் பிரமாணம் 341 | நுழைவுச்சீட்டுக்கள் உடனான புத்தகங்கள் மற்றும் பற்றுச்சீட்டுகள் வழங்கும் போதும் மீண்டும் பொறுப்பு ஏற்கும் போதும் பதிவு செய்வதற்காக அடியிதழ்சேர் புத்தகங்கள் பதிவேடு ஒன்று பராமரிக்கப்பட்டு இருக்கவில்லை. | எதிர்காலத்தில் பதிவேடு ஒன்று பேணுவதாக | அடியிதழ் சேர் புத்தக பதிவேடு பேணப்பட வேண்டும் |

| | | | | |
|---|---|---|---|---|
| (viii) | நிதிப் பிரமாணம் 386(3) | எழுதப்படுகின்ற அனைத்து காசோலைகளிலும் அடியிதல் சேர் புத்தகத்தில் உறுதிச்சீட்டு இலக்கம் குறிப்பிடப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சீராக்கம் செய்வதாக | காசோலைகளின் அடியிதல் சேர் புத்தகத்தில் உறுதிச்சீட்டு இலக்கம் குறிப்பிடப்பட வேண்டும். |
| (ix) | நிதிப் பிரமாணம் 392 | மீளாய்வாண்டின் மே மாதம் ஊழியர் சேமலாப நீதியத்திற்கு செலுத்தப்பட்டிருந்த காசோலை ஒன்று தீர்வையாகாமல் இருக்கையில் குறித்த ஏற்பாடுகள் பின்பற்றப்படாமல் மீளாய்வாண்டின் திசெம்பர் மாதம் மீண்டும் காசோலை ஒன்று வழங்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சீராக்கம் செய்வதாக | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (x) | நிதிப் பிரமாணம் 395(1) | மீளாய்வாண்டிற்காக வங்கி இணக்க கூற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை | எதிர்காலத்தில் சீராக்கம் செய்வதாக | நிதி பிரமாணங்களின் பிரகாரம் வங்கி இணக்கக் கூற்று தயாரிக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2009 இன் 44 ஆம் இலக்க 4 நம்பிக்கை பொறுப்பு நிதிய சட்டத்தின் 20 நோக்கங்களில் 16 நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக நம்பிக்கையாளர் சபையால் போதியளவு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டில் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நம்பிக்கை நிதியத்தை உருவாக்கியதன் நோக்கங்களை நிறைவேற்று வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 2/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டமொன்று, பெறுகை திட்டமொன்று மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்ாலத்தில் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டம், பெறுகை திட்டம் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கை தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | இந்த தொகுதிக்குரியதாக 400 ஏக்கர காணி உள்ளதாக குறிப்பிடப்பட்ட போதும் அக்காணி அளவிடப்பட்டு அதற்குரிய அளவீட்டு அறிக்கைகள் பொறுப்பிற்கு பெறப்பட்டிருக்கவில்லை. | எதிர்ாலத்தில் குறித்த அளவீட்டு அறிக்கைகளை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக | பொறுப்பிற்குரிய காணி அளவிடப்பட்டு: அறிக்கைகளை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | அம்புலுவாவ நிதியத்தின் பெயரில் பொது நம்பிக்கையாளரின் கீழ் காணப்படுகின்ற அனைத்து பணம் மற்றும் அம்புலுவாவ வளாக அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பு பொறுப்பு நிதியம் பெயரில் வங்கிகளில் காணப்படும் தொகை தொடர்பான தகவல்கள் மற்றும் பதிவேடுகள் பொறுப்பின் ஊடாக பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பொது நம்பிக்கையாளரின் கீழ் காணப்படுகின்ற நிதியத்திற்காக எந்த ஒரு தகவல்கலும் எம்மிடம் காணப்படவில்லை. | நிதியத்திற்குரிய பொது நம்பிக்கையாளரின் கீழ் காணப்படுகின்ற அனைத்து சொத்துக்கள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அம்புலுவாவ உயிரின பல்வகை தொகுதிக்கு நுழைவதற்காக கணனியுடன் அண்மித்து வழங்கப்பட்டிருந்த நுழைவுச் சீட்டுக்கள் விற்பனைக்குரிய நாளாந்த வருமான அறிக்கை மற்றும் மாதாந்த பொழிப்பறிக்கைகளை பெற்றுக் கொள்வதற்கும் அதனை பொறுப்பு வாய்நத ஒருவரின் மேற்பார்வைக்கு உட்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நாளாந்த அறிக்கை மற்றும் மாதாந்த வருமான அறிக்கை பொறுப்பு வாய்ந்த ஒருவரின் மேற்பார்வையின் கீழ் பராமரிக்கப்பட வேண்டும். |

## 3.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் ஏப்ரல் மாதத்தில் நிதியத்தின் பொறுப்பில் 26 ஊழியர்கள் சேவை புரிந்திருந்த போதும் நம்பிக்கை பொறுப்பின் தீர்மானம் ஒன்று இல்லாமல் 37 ஊழியர்களுக்காக புது | அம்புலுவாவ வளாகத்தில் சேவை புரியும் பொலிஸ் உத்தியோகத்தர்களின் குடும்பத்துக்கு இந்த மேலதிக கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. | நம்பிக்கை பொறுப்பின் தீர்மானத்தைப் பெற்றுக்கொண்டு குறித்த நடைமுறை ஒன்றின் பிரகாரம் சேவை புரியும் ஊழியர்களுக்கு |

| | | | |
|---|---|---|---|
| | வருட பணிக்கொடை படிகள் ரூபா 697,500 தொகை செலுத்தப்பட்டிருந்தது. அதற்கிடையே நிதிய பொறுப்பின் சேவை புரியாத 11 பேருக்கு ஒருவருக்கு ரூபா 12,500 வீதம் ரூபா 137,500 ஆன பணிக்கொடை படிகள் முறையற்ற வகையில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே கொடுப்பனவிற்குரிய 33 பேர்களுக்கு செலுத்தப்பட்ட ரூபா 602,500 கூட்டுத்தொகையான படிகள் பெற்றுக் கொள்ளப்பட்டதற்கான பதிவேட்டை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை | | தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நிதியத்தின் பொறுப்பில் காணப்படுகின்ற மாநாட்டு மண்டபம் நோக்கத்திற்கு உட்பட்ட செயற்பாட்டுக்கு ஈடுபடுத்தப்படாமல் வியாபார நடவடிக்கை ஒன்றுக்காக மீளாய்வாண்டின’ மார்ச் 10 ஆம் திகதி முதல் பெறுகை செயற்பாடு பின்பற்றப்படாமல் குத்தகை அடிப்படையில் தனியார் கம்பெனி ஒன்றுக்கு வழங்கப்பட்டிருந்தது | இது தொடர்பாக இணையதளத்தில் விளம்பரம் வெளியிடப்பட்டுள்ளதாக | சொத்துக்களை நோக்கத்திற்கு உட்பட்ட செயற்பாடுகளுக்காக ஈடுபடுத்தப்பட வேண்டும். |
| (இ) | உயிரியல் பல்வகை தொகுதியில் பொருத்தப்பட்டிருந்த நீர் மோட்டார் திருத்தம் என்று நீர் மோட்டாரை திருத்தம் செய்து தனியா நிறுவனம் ஒன்று ரூபா 159,745 ஆன பட்டியலை சமர்ப்பித்திருந்த போதும் குறித்த சேவை வழங்கும் நிறுவனத்திற்கு 2022 திசெம்பர் 02 ஆம் திகதி அதில் ரூபா 60,000 கொடுப்பனவு செய்யப்பட்டு 2022 நவம்பர் 26 ஆம் திகதி வெளிதரப்பினருக்கு ரூபாய் 100,000 தொகை முறையற்ற வகையில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | ரூபா 100,000 கொடுப்பனவு தொடர்பாக ஆராய்ந்து பார்த்து பின்னர் பதிலை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | முறையான நடைமுறை ஒன்று பின்பற்றப்பட்டு சேவைகள் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஈ) ரூபா 2,214,825 ஆன 16 கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்களுக்கான கொடுப்பனவுகளில் பட்டியல்கள் சமர்ப்பிக்கப்படாத ரூபா 609,845 கூட்டுத்தொகையான பணம் செலுத்தப்பட்டு முறைகேடு ஒன்று இடம்பெற்று இருந்தது. | ஆராய்ந்து பார்த்து பின்னர் பதிலை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | பட்டியல்கள் உரிய கொடுப்பனவு உறுதிப்படுத்தப்பட வேண்டும் |

### 3.4 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அம்புலுவாவ உயிரின பல்வகை தொகுதியின் விவசாய பண்ணை மற்றும் மண் பாதுகாப்பிற்காக கட்சுவர் அமைத்தலுக்காக ரூபா 1,063,080 கொடுப்பனவு தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன | | |
| (அ) செயற்திட்டத்ததிற்குரிய பொறியியலாளர் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | பொறியியலாளர் மதிப்பீடு தயாரிக்கப்படவில்லை | செயற்திட்டத்தை நிறைவேற்றும் போது மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) 2006 பெறுகை வழிகாட்டி கோவையில் 3.4 பந்தியின் பிரகாரம் போட்டி விலை கோரல் ஒன்று இல்லாமல் வெளிதரப்பினருக்கு ஒப்பந்தம் அளிக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்வதாக | பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) கட்சுவர் அமைப்பதற்காக ஒரு சதுர அடிக்கு ரூபா 90 கொடுப்பனவு செய்வதற்கு இரண்டு தரப்பினரும் திகதி இல்லாத உடன்படிக்கை ஒன்றுக்கு இணங்கப்பட்டிருந்த போதும் ஒரு சதுர அடிக்கு ரூபா 90 என்ற வீதம் கணக்கிடப்பட்ட முறை கணக்காவிற்கு வெளிப்படுத்தப்படாதிருந்ததுடன் உடன்படிக்கை பிரகாரம் ஒரு சதுர அடிக்கு ரூபா 90 செலுத்த வேண்டிய போதிலும் பட்டியல் | உடன்படிக்கை செய்யும்போது தவறு ஒன்று இடம்பெற்றுள்ளதாக | உடன்படிக்கையை சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தயாரிக்கும் போது கன அடிக்கு ரூபா 90 கொடுப்பனவு செய்தமையால் ரூபா 616,410 கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | செயற்திட்டத்திற்காக இரு தரப்பினரும் கையொப்பமிட்ட உடன்படிக்கையின் முதலாவது தரப்பினராக கையொப்பமிட்ட அம்புலுவாக உயிரியல் பல்வகை நிதியத்தின் நிர்மாண மதிரையாளரே செயற்திட்டத்தின் அளவீட்டை எடுத்து பட்டியலைத் தயாரித்து கொடுப்பனவு உறுதிச் சீட்டில் பரிந்துரை செய்திருந்தார். | எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகள் இடம் பெறாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | உள்ளக கட்டுப்பாட்டு முறை ஒன்றை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதி பிரமாணம் 756 இன் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுக்குரிய பொருட் கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. | எதிர்காலத்தில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | செயற்திட்டத்தை நிறைவேற்றும் போது மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட வேண்டும் |
| (ஆ) | நிதியத்திற்கு சொந்தமாக ரூபா 9,130,000 கூட்டுத்தொகையான டொயோடா வகை வாகனம் மற்றும் மின்சாரத்தினால் செயற்படும் மோட்டார் சைக்கிள் பௌதீக ரீதியாக காணப்படுகின்றமை மற்றும் நிதியத்தின் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டதை உறுதி செய்வதற்கான தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. | மின் மோட்டார் சைக்கிளின் மின் பட்டரியை திருத்துவதற்கு கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது மோட்டார் வாகனம் தற்போது குழாம் வாகனமாக பயன்படுத்தப்படுகின்றது. ஓட்டக் குறிப்புகள் சம்பவ பதிவேட்டு புத்தகம், திருத்த பதிவேடுகள் எதிர்காலத்தில் சமர்ப்பிப்பதாக. | நிதியத்துக்குச் சொந்தமான சொத்துக்கள் நிதியத்தின் நடவடிக்கை களுக்காக பயன்படுத்த வேண்டும் |
| (இ) | மீளாய்வாண்டின் இறுதி திகதி வரையில் பெறுமதி வெளிப்படுத்தப்படாத 03 கட்டிடங்கள் 02 ஆண்டுகள் காலமாக விளைவற்று காணப்பட்டன. | பெறுமதி குறிப்பிடப்படாத மூன்று கட்டிடங்களை எதிர்காலத்தில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | பொறுப்புக்கு சொந்தமான சொத்துக்களை ஆக்கபூர்வமான நடவடிக்கைகளுக்கு பயன்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | முன்னைய 02 ஆண்டுகளில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் அம்புலுவாவ வளாகத்திற்கு நுழையும் பிரதான நுழைவு வீதியில் இருந்து உள்ளக வீதியில் 6 கிலோமீற்றர் அளவில் ABC இட்டு காபட் இடுவதற்காகவும் 2021 ஆம் ஆண்டின் போது மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் அம்புலுவாவ வளவில் அமைந்துள்ள குளத்தின் வான்கதவு மற்றும் குளத்தின் சுவரை திருத்துவதற்கும் நடைபாதையின் இருபுறமும் அச்சுக்கள் பிடிப்பதற்கான செயற்திட்டங்களின் பெறுமதி இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கிறேன். வீதி அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்தும் ஏனைய நிறுவனங்களிடம் இருந்தும் தகவல்கள் பெற்றுக் கொள்ளப்பட்டு சொத்துக்களின் கீழ் எடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | அபிவிருத்தி செயற்திட்டங்களின் பெறுமதி சொத்துக்களாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

**3.6 ஊழியர் அணி முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பொறுப்பு நிதியச் சட்டத்தின் 6(2)(ஊ) பிரகாரம் ஆட்சேர்ப்பு நடைமுறையொன்று தயாரித்து அங்கீகரித்துக் கொள்ளப்படாமல் உயிரியல் பல்வகை தொகுதியில் 23 ஊழியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | எதிர்காலத்தில் சீராக்குவதாக | ஆட்சேர்ப்பு நடைமுறையொன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஆ) | நம்பிக்கை பொறுப்பினால் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள பதவியணியினருக்கு முறையான நியமன கடிதம் ஒன்று அல்லது சேவையில் ஈடுபடுத்துவது தொடர்பான சேவை உடன்படிக்கை ஒன்றில் கையொப்பமிட்டு இருக்கவில்லை. | எதிர்காலத்தில் சீராக்கம் செய்வதாக | சேவையில் ஈடுபடுவதுடன் தொடர்பாக முறையான நியமன கடிதங்கள் சேவை உடன்படிக்கைகள் பேணிச் செல்லப்பட வேண்டும். |
| (இ) | நிதியத்தினால் ஊழியர்களை வெளிக்கள சேவையில் ஈடுபடும் போது அதற்குரிய மாதாந்த அல்லது நாளாந்த சேவை முறை பதிவேடு ஒன்று தயாரிக்கப்பட்டு இருக்கவில்லை. | எதிர்காலத்தில் சீராக்கம் செய்வதாக | மாதாந்த அல்லது நாளாந்த சேவை முறை பதிவிருந்து பேணி செல்லப்பட வேண்டும |

## 4 கணக்களிதன்மையும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளக கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நம்பிக்கை நிதியத்தின் அலுவலக நடவடிக்கைகள் நிர்மாண மதியுரையாளர் மற்றும் கணக்கு உதவியாளர்களால் நிறைவேற்றப்பட்டு இருந்த போதும் அது தொடர்பாக அதிகாரம் அளிக்கப்பட்ட கடிதம் ஒன்றோ நியமனக் கடிதம் ஒன்றோ வழங்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே உள்ளக பரிசோதனை மேற்கொள்ளும் வகையில் இடம் பெறாதிருந்ததுடன் உள்ளக கட்டுப்பாடு பலவீனமான மட்டத்தில் காணப்பட்டன. | எதிர்காலத்தில் முறையாக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | முறையான உள்ளக கட்டுப்பாட்டு முறை ஒன்று அறிமுகப் படுத்தப்பட வேண்டும். |

### 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 1/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 1 ஆம் பகுதியின் 15.1 ஆம் பந்தியில் உள்ளடக்கப்பட்ட நிதிப் பிரமாணம் 877(1)(இ) பந்தியின் பிரகாரம் மீளாய்வான்டிற்குரியதாக பாதீடு தயாரிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பொருளாதார சிக்கலின் அடிப்படையில் நாட்டில் காணப்பட்ட சீரற்ற நிலை காரணமாகவும் குறித்த திட்டமிடப்பட்ட பிரகாரம் நிறைவேற்ற முடியாது இருந்ததாக | சுற்றறிக்கை பிரகாரம் பாதீடு தயாரிக்கப்பட்டு அங்கீகரித்துக் கொள்ளப்பட வேண்டும் |